COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION
20 SEP 2008
CHENNAI-600 005

சுருக்கம்

திடக்கழிவு மேலாண்மை – சென்னையைச் சுற்றியுள்ள நகராட்சிகளுக்கு உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு மான்யத் தொகை விடுவிக்கப்பட்டது – புழுதிவாக்கம் நகராட்சிக்கு ஒதுக்கப்பட்டு செலவிடப்படாத தொகையிலிருந்து ரூ.98.00 லட்சம் ஆலந்தூர் நகராட்சிக்கு மாற்றம்– பின்னேற்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை.

அரசாணை (ப) எண்.401 நாள்:20.09.2008

படிக்க:

1. அரசாணை (ப) எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.3.2006.
2. அரசாணை (ப) எண்.33, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.1.2007
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.4349/ 2007/ப்பி4, நாள் 22.2.2008.

------------

ஆணை:

முதலாவதாகவும், இரண்டாவதாகவும் படிக்கப்பட்ட அரசாணைகளில், சென்னையைச் சுற்றியுள்ள நகராட்சிகளுக்கு திடக்கழிவு மேம்பாட்டிற்காக உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு மான்யம் விடுவிக்கப்பட்டது. இதில் புழுதிவாக்கம் நகராட்சிக்கு முறையே ரூ.110.75 இலட்சம் 2005–06 ஆம் ஆண்டிலும் 40.95 இலட்சம் 2006–07 ஆம் ஆண்டிலும் ஆக மொத்தம் ரூ.151.70 இலட்சம் இவ்விரு அரசாணைகள் வாயிலாக விடுவிக்கப்பட்டது.

2. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட அரசாணைகளின்படி, சென்னையைச் சுற்றியுள்ள நகராட்சிகளுக்கு திடக்கழிவு மேம்பாட்டிற்காக உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு மான்யம் விடுவிக்கப்பட்டதில் புழுதிவாக்கம் நகராட்சிக்கு விடுவிக்கப்பட்ட ரூ.151.70 இலட்சத்தில், அந்நகராட்சியில் இதுவரை ரூ.42.34 இலட்சம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்றும், அந்நகராட்சிக்கென உரக்கிடங்கு இல்லாததால் இன்னும் செலவிடப்படாமல் ரூ.109.36 இலட்சம் உள்ளது என்றும், ஆலந்தூர் நகராட்சிக்கு சொந்தமான

பள்ளிக்கரணை உரக்கிடங்கு 15 ஏக்கர் பரப்பளவில் உள்ளது என்றும், உரக்கிடங்கில் நாள்தோறும் நகராட்சியில் உருவாகும் குப்பைகள் லாரிகள் மூலம் கொண்டு சேர்ப்பிக்கப்பட்டு வருகிறது என்றும், உரக்கிடங்கை சுற்றிலும் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால் வேற்று பகுதிகளில் இருந்து வரும் குப்பைகளும், கழிவுகளும் சாலை ஓரத்தில் கொட்டப்படுவதால் பொதுமக்களுக்கு சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது என்றும், உரக்கிடங்கில் ஆக்கிரமிப்பு எதுவும் ஏற்படாமல் பாதுகாக்கவும் வேண்டியது அவசியம் என தெரிவித்து மேற்காணும் பகுதிக்கு பாதுகாப்பு சுவர், அணுகுசாலை மற்றும் குடிநீர் வசதி மின் வசதிகள் மற்றும் பாதுகாப்பு சுவருக்கு மேல் கிரில் அமைத்தல் ஆகிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.98.00 இலட்சம் மான்யம் வழங்குமாறு ஆலந்தூர் நகராட்சி ஆணையர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் என்றும் பொதுமக்கள் நலன்கருதியும், உரக்கிடங்கினை ஆக்கிரமிப்பு ஏதும் செய்யாமல் இருக்கவும் அத்தியாவசியம் கருதி, புழுதிவாக்கம் நகராட்சியில் உரக்கிடங்கு அமைக்க போதிய நிலம் இல்லாத காரணத்தால் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மான்யம் முழுமையாக செலவிடப்படாததாலும் ஆலந்தூர் நகராட்சியில் பள்ளிக்கரணை உரக்கிடங்கில் மேற்கான் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.98.00 இலட்சம் ஆலந்தூர் நகராட்சிக்கு மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை மூலம் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது என்றும், இச்செயலுக்கு பின்னேற்பு வழங்குமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(i) ஆலந்தூர் நகராட்சியில் பள்ளிக்கரணை உரக்கிடங்கில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள புழுதிவாக்கம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாமல் இருந்த ரூ.98.00 இலட்சத்தினை ஆலந்தூர் நகராட்சிக்கு தனது 22.02.2008 நாளிட்ட செயல்முறை ஆணை மூலம் மாற்றம் செய்த நகராட்சி நிர்வாக ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது;

(ii) இனி வருங்காலங்களில் ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட தொகையை வேறு உள்ளாட்சி அமைப்புக்கு நிதி மாற்றம் செய்வதானால், அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே மாற்றம் செய்ய வேண்டும்; மற்றும்

(iii) புழுதிவாக்கம் மற்றும் ஏனைய நகராட்சிகளிலும் மாற்று வழி முறைகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை அந்தந்த நகராட்சிகளுக்கென ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள நிதியைக் கொண்டு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.102/JS(JV)/08. நாள் 22.7.2008ல் பெற்ற ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.5.
ஆணையர், ஆலந்தூர் நகராட்சி, ஆலந்தூர், சென்னை.
நிதித் (நநி(ம)குவ) துறை, சென்னை-9.
நகல்:
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை,
இருப்பு கோப்பு/ உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.